Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞு மாசி மீ கஉ வெள்ளிக்கிழமை (24 FEB. 1956) [இல-சஎ]

# தமிழ் மக்களின் எதிர்காலம்

## தலைவர்களை ஒன்றுபடுத்தற்குவழி

## தேசீய மகாசபை அமைக்க வேண்டுகோள்

தமிழ்பேசும் என்னருமை அன்பர்களே! உங்களிடத்திலே பகிரங்கமாக ஒரு விண்ணப்பம். தமிழ்பேசும் இனத்தின் முன்னர் பல பிரச்சினைகளில் பல இடியப்பச் சிக்கல்களுண்டாகி நிலைமை இன்று கவலைக்கிடமாகிவிட்டது. காகத் தமிழினத்தின் இன்றைய அபாயகரமான நிலைமையை நன்குணர்ந்தவர்களென்று கருதப்படுந் தலைவர்கள்கூட ஒன்று சேர்வதை விரும்பவில்லை. சில காட்களாக நடந்துவருஞ் சம்பவங்கள் தமிழ்பேசும் மக்கள் யாவருக்குங் கவலையையும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையுமே கொடுப்பதாகக் காணப்படுகின்றன. இந்த நிலைமைக்கு யார் காரண புருஷர், என்பதை ஆராய்ந்து முட்டையிலே மயிர்பிடுங்கி ஒருவரையொருவர் திட்டிக்கொண்டிருப்பதில் பயன் எதுவுமேயில்லை. நமக்கும் மொழிக்கும் மற்றும் யாவுக்கும் மிகவும் பயங்கரமான சோதனை ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் கூடத் தலைவர்கள் ஒத்துப்போகாமல் எதிர்க்கொண்டு போனது பற்றித் தமிழ்பேசும் சமூகம் நன்கு ஆழ்ந்த கவலையுடன் சிந்திக்கின்றது.

### வாக்குச்சீட்டு

தேர்தலும் நெருங்கிவிட்டது. கைவெடுப்புக் கலும் தலையசைப்புகளும் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டன. தலைவர்களும் கிளம்பப்போகின்றார்கள் தேர்தலுக்கு இல்லை போட்டிக்கு. போட்டா போட்டிக்கு மக்களைக் கிளப்பப்போகிறார்கள். இல்லை மக்களைக் குழப்பப் போகிறார்கள். அபேட்சகர்களாக வருபவர்கள் எல்லோரும் தமிழ் மொழியையும் இனத்தையும் தாமே காப்பாற்றப்போகின்றோம் என்றுதான் வரப்போகின்றார்கள்- வாய்ச்சொல் வீரப் பிரசாதம் வழங்கி — வாக்குச் சீட்டுப் போட்டுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ள இப்போதே மூட்டைகள் கட்டுகின்றார்கள். மனக்கோட்டைகளும் கட்டுகின்றார்கள்.

இவர்களில் யார் பாராளு மன்றத்துக்குப் போனாலும் தமிழ்பேசும் இனத்தை- மொழியை- மற்றும் உரிமைகளைக் காப்பாற்றப் போவதில்லை. "சோழியன் குடுமி சும்மா ஆடாது" சொகுசாகத் திரியவும் பட்டம் பதவியிற் பெருமைகொள்ளவும் பேரெடுக்கவும்தான் இவர்கள் பலரின் உள் எண்ணம்.

### எங்களுக்கு வேண்டியது

இனி, இவர்களில் ஒருசிலர் நினைத்துக்கொண்டார்கள், "நாங்கள் அரிச்சந்திரன சந்ததித் தீர்க்கதரிசிகள், நாங்கள் இறி விட்ட வட்டத்திலுள்ளே மக்கள் திறப்ர்கள்' என்று. [illegible] பெரிய [illegible] லென்ன, தமிழ் [illegible] வாகிய நாமகள் [illegible] ஆன் இவர்களால் [illegible]

அடைபட்டு கிடக்க வேண்டுமென்று. இன்றைய நிலையில் எங்களுக்கு வேண்டியது இதுதான். இதற்கு வேண்டியதை இன்றே செய்தல் வேண்டும்.

### இதற்கு வேண்டியது

இதற்கு வேண்டியது தமிழ் பேசும் மக்கள் வதியும் ஒவ்வொரு கிராம பட்டின நகர

பண்டிதர் ந. சுப்பிரமணியம்
சித்தன்கேணி

சங்கப் பகுதிகளின் ஒவ்வொரு வட்டாரங்களுமிருந்து 3 முதல் 5 பேர் வரை கொண்ட ஒரு நிருவாகசபை அவ்வவ் வட்டார மக்களால் அமைக்கப்படவேண்டும். தமிழ் பேசும் மக்கள் வதியும் எல்லா இடங்களிலுமிருந்து அங்கத்தவர்கள் தெரியப்படுதல் வேண்டும். இந்த நிருவாக சபையினர் எல்லாருஞ் சேர்ந்து அவ்வத் தொகுதிப் பொதுச்சபையொன்றை நிறுவுதல்வேண்டும். எல்லாத் தொகுதிப் பொதுச் சபையுஞ் சேர்ந்து ஒரு 'மத்திய காரிய நிருவாகசபை' அல்லது செயற்குழு ஒன்றை ஆக்குதல் வேண்டும். இந்தச் செயற்குழு எல்லாவற்றையும் ஏற்று ஆக்கவேலையில் ஈடுபடச்செய்தல் வேண்டும்.

வாக்காளர் சங்கம் — நிருவாகசபை — தொகுதிப் பொதுச்சபை — செயற்குழுயாவும் இப்போது நெருங்கிய தொடர்புகளைப் பெறும். அபேட்சகர்களாக வருபவர் செயற்குழுவுக்கும், தொகுதிக்கும் [illegible] [illegible] வேண்டும். செயற்குழுவும

தொகுதியும் தகுதியெனக் காண்பவரைப் போட்டியின்றி நிபந்தனைகளுடன் பாராளுமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

காணயக் கயிறு இவ்வளவு காலமும் அவர்களிடத்திலே இருந்தது. இழுக்க விட்டது எங்கள் பிழை. இதனால் அவர்கள் சிலரைப் பலகாலம் ஏமாற்றினர்கள். பலரைச்சிலகாலம் ஏமாற்றினார்கள். எல்லோரையும் எப்போதும் ஏமாற்றமுடியாது. இனிமேல் நாணயக் கயிறு எங்களிடத்திலே இருத்தல் வேண்டும். கயிற்றைப் பிடித்துச் சுண்ட இழுக்க வேண்டும்.

### இந்திய முன்மாதிரி

இந்தியா ஒருபெரிய தேசம். இலங்கையிலும் எத்தனையோ மடங்கு பெரியது. அந்தப் பெரிய இந்தியாவை ஐந்து பெரும் பகுதிகளாகப் பிரித்துப் பகுதிக்கொருதாபனமாக அமைத்து — அந்தப் பகுதிக்கு அடங்கிய தொகுதிகளெல்லாம் குறித்த பகுதிக்குளடங்கி நல்ல நிருவாகமும் நடைபெற வழி காணவேண்டும் என்று நேருஜி கூறுகின்றார். அது நிருவாக முறையில்; அதே முறையிற் குறிப்பிட்ட ஒரு தாபனத்தை அமைத்து நாமும் பணியாற்றல்வேண்டும்.

### உலகத்தில் இல்லை

தமிழன் மனதிலே உதியாத கருத்துக்கள் இந்த உலகத்திலே இல்லை. நமது தலைவர்களிற் சிலர், [illegible] — தமிழ் பேசு [illegible] மக்களை ஒரு மலிசுத சந்தைப்

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

### பாக்கிஸ்தானில் இருமொழித் தீர்மானம்

பாக்கிஸ்தான் அரசியல் நிர்ணயசபை வங்காளி, உருது ஆகிய இருமொழிகளும் அரசகரும மொழிகளாக வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றதாம்.

### அதிதீவிர அழித்தற் கருவி

மஸ்கோவிலிருந்து மூப்பது நிமிட நேரத்தில் விரைந்து சென்று உலகிலுள்ள அழிக்கக்கூடிய அதிதீவிர அணுசக்திக் கருவி ஒன்றை உருவியக் கண்டுபிடித்திருப்பதாக ஸ்ரீ ஜே. பி ஹினெஸ் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசனைக்கூட்டமொன்றிற் கூறினாராம். பொதுவுடைமைக்கட்சி மகாநாட்டில் உருஷியபாதுகாப்பு மந்திரி ஜோர்ஜி ஜுகோவ் பேசும்போது அணுக்குண்டு யுத்தத்துக்குக்குறிப்பிட்டஎல்லை இருக்கமாட்டாதென்றும் அமெரிக்க பகுதிக்குஞ் செல்லுமென்றும் அதை உருஷியா விரிக்குமென்றும் எச்சரிக்கை விடுத்தாராம்.

அரசியல்

# கழனி மொழித் துரோக முழக்கம்

## தான் தோன்றி இரு தமிழ்க் குரல் ?

### சர்வாதிகார ஆட்சி ஆரம்பத்திற்குச் சான்று

பழித் தொழிலுக்கு ஒரு புண்ணிய நதிக்கரையைத் தெரிந்தெடுத்த வகையிலேயே ஐ. தே கட்சியின் இரணியத் தடிப்பு வெளியானது. அப்பால் அந்தப் பஞ்சசீல போதகருக்குப் புனிதமான நகரிலே நடந்த மொழித்துரோகத்தை என்னென்றுரைப்பது .... .... ....?

சிங்களமே அரசமொழி என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. கன்னங்கராவுக்கும், திரு. ஆனந்ததிச அலுவிசுக்கும் அந்த மொழி நாடகக்கட்டியக்காரர், திரு ஜயவர்த்தன மாலை யிட்டனராம். ஆனல் அவர் தங்கு தோன்றித் தமிழ் வேண்டாம் என்று கூறிய அந்த இரு தான் தோன்றித் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் அல்லவா மாலைகட்டிப் போட்டிருத்தல் வேண்டும்? இந்த வகையிலே முன் சிலசில காலங்களிலே இந்த மனப்பான்மை படைத்த தமிழர் [illegible] [illegible] வேற்கப்படாது திறவு

யில்லை. குலத்தைக் கெடுத்தாலும் ஆதிக்கக்கட்சியின

லத்தைப் பாதுகாப்பது நியாயந்தானே!

மொழித் துரோக விழா பலதிறப் பட்டதாக விருந்தது. தாய்மொழி தமிழ் என்று வாதாடி வந்த Dr. கலீலும் வாய் விட்டுச் சொல்லிவிட்டார் சிங்களமே அரசமொழியென்று.

தமிழ்மக்கள் தங்கள்உரிமைகளைக் காக்கத் தலைகிமிர்ந்து நிற்றல் துரோகம் என்று எச்சரிக்கை செய்துவிட்டார் பிரதமர் கொத்தலாவலை.

### தேர்தல் தேதிகளில் மாற்றம்

5, 7, 9 4-56 ல் பொதுத் தேர்தல் நடக்கக்கூடுமென்பதாகக் கூறப்பட்டு 5, 7, 10-4-56 ல் நடக்குமென்பதாய் இப்பொழுது கூறப்படுவதாக அறிய வருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருசெசி ...
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹூ மாசிஈ
கஉ ௨ வெள்ளிக்கிழமை

## துரோகம் எது......?

சாத்தமும் பேறநாட்டாண்மைப் பேச்சு நிகழ்த்தி, சிங்களமே அரசமொழி என்று, களனிக்கரை மாநாட்டிலே ஆளுங் கட்சியினர் முடிவு செய்துவிட்டனர். கங்கையின் குளிர்மை, புத்த விகாரையின் பரிசுத்தம் என்பன இருந்த பொழுதிலும் சொற்பொழிவுகள் காரசாரமாகவும் உன்மத்தமாகவுமே முழங்கின. அவ்வாறுனும் ஒன்றுமில்லை. ஆனால் முதலமைச்சர் நாளுக்கு நாள வேடம்மாறித் தோன்றுப விபரீதத்தை மறைக்கவும மக்கள் அவர்மீதுகொண்ட நம்பிக்கையின்மையை மறக்கவும் எடுத்த ஒரு சூழ்ச்சிதான் வியப்பாக இருந்தது. ஒற்றுமை வேண்டும், எல்லோரும் ஒரு சமமான உரிமைகள் பெறுதல் வேண்டும் என்று நாளிலும் பொழுதிலும் கூறி ஐக்கிய தேசியக் கட்சியை அமைத்து ஆட்சி ஆதிக்கமும் பெற்றுவிட்டு அந்தக் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருசாராரை ஒதுக்கி ஒழித்து விடுவதற்காக அவர்களின் உரிமைகளை இல்லாமற் செய்தல் சனநாயக முறையென்று மனச்சான்றை ஒருபுறம் அகற்றிவிட்டு ஒரு இனநாயகக் கொள்கையை உபதேசித்த தலைவா உரிமை இழந்தவர்கள் ஒரு மறுப்புங் கூறவொண்ணுதென்றும் எதிர்ப்புக் காட்டின் நாட்டின் துரோகிகளாகக் கணிக்கப்பட்டுத் தண்டனைக்குள்ளாவார்களென்றும் எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

யார் துரோகிகள்? துரோகம் யாது? மக்கள் ஆட்சிமுறை என்ற போர்வையிலே ஒரு சாராருக்கு உரிமைகளை மறுத்தல் துரோகமா? அல்லது எங்கள் நாட்டில் எங்கள் உரிமைகளைக் கைவிடமாட்டோம் என்பது துரோகமா? சனநாயகக் கொள்கையென்று பறைசாற்றிவிட்டு ஒரு இனத்தின மொழியை அரியாசனத்திலிருந்து இழுத்துவிடுவது துரோகமா அல்லது நாட்டில் வழங்கும் தாய்மொழிகளின் சமஉரிமை நிலவுதல் வேண்டும என்றுகூறி, அவவாறன்றேல அம்முடிபை ஏற்கமாட்டோமென்று உண்மை பேசுவது துரோகமா? முடியரசைத் தடிந்துவிட்டுக் குடியரசு பெற்றுத் தந்தோம் என்று பெருமை பேசுபவர்கள், குடிகளில் ஒருசாரார் குடிமையற்றிருப்பதற்கு வழிதேடுவது துரோகமா? அல்லது குடிமை உரிமையை விடமாட்டோம் என்று உறுதிமொழி உரைப்பது துரோகமா?

இருபதாம் நூற்றாண்டாம், மனிதஉரிமைகளாம், சனநாயக ஆட்சியாம், ஐக்கியநாட்டு அமைப்பில் அங்கத்துவமாம்; ஆனால் இந்த ஒப்பார அழக பாரத்திலே உள்ளே பார்த்தால் மிலேச்சர்காலத் தோற்றம், அடிமைகிலைமை அடக்குமுறை என்கின்ற கிருமிகள்! கேட்பதற்கு ஆள் இல்லையென்று ஆட்பலத்தால் அடக்கிவிட எண்ணிவிட்டால் உரிமை இழப்பதற்குச் சிறுபான்மையினர் உடம்பாடாகிவிடுவார்கள் என்ற துணிபா?

பரந்து விரிந்திருக்கும் பார்முழுவதும் இந்த இனநாயக இரணிய ஆட்சியைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறதென்று அறிவதற்கு ஐ. தே. கட்சியினருக்கு அவ்வளவு ஆற்றலில்லையா? ஐக்கிய நாட்டு அமைப்பிலே அங்கத்துவம் வகித்துக்கொண்டு உள்நாட்டு ஒற்றுமைப் பங்கத்தை உண்டு பண்ணுவது அரசியல் ஞானம் என்றுதானு ஆளுங் கட்சியினர் கருதுகின்றார்கள்? உரிமைக்காக ஊரவர்கள் எழுந்து நிற்பதை ஒருவரும தடுக்க முடியாதென்பதை அறியாதவர்களுக்கு அமைச்சு நடத்தும் பொறுப்பு பொருந்துமா?

முதலமைச்சர் பதவிக்காக மூர்க்கத்தனமாகத் தலைவர்கள் நடந்துகொள்வதை நாம் குறைகூறவில்லை; கட்சிப்பலன்பெறுவதற்காகச் சிங்கள மொழி அபிமானத்தைக் காட்டுவதை நாம் கண்டிக்கவில்லை; ஆனால் இந்தச் சுயநல வேட்டையிலே இருநாட்டுமக்களின, அவர்கள் எத் தொகையினராலும் உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு அரசியற் றலைவர்கள் பேச்சினற் பிரசாரத்தாற் பிறசெய்கைகளாற் பழிசெய்வதை நாம கண்டனஞ் செய்கின்றோம்.

## வாழ்க்கை வானில்

—வளர்மதி

### நீர் வரட்சியாலே தலைவர்கள் தலை வரட்சி!

நாடெங்கும் நீர் வரட்சி. கோடை வெய்யில் கொடும் பனி. இந்த வகையிலே இயற்கை நிலை மாறியிருக்கின்றது. இதனுற்போலும் தலைவர்களுக்கும் தலை வரட்சி வர வர மோசமாகின்றது. கட்சிகளும தங்களுக்குட் கட்சி சேருவதிலே உண்டுபண்ணும் உடம்பாடுகளும் இந்தப் பனிக்காலக் கோல விபரீதமாகவே தோன்றுகின்றன,

### இருபதாந் திகதியில் இடதுசாரிகள்

இருபதாந் திகதி தமிழ் பேசும மக்கள் ஒருமுகமாகத் தங்கள் துக்கத்தைக் காட்டி வைத்தார்கள். ஆனல் இதிலே இடதுசாரிகள் சேர்ந்து கொள்ளவில்லை. காரணம் தமிழ்ப் பேசும் மக்கள் வகுப்புவாதிகளாம்! ஆனல் அரிசியில்லை அடிப்படையான ஆவணி வேலை நிறுத்தம் நடந்தபொழுது கட்சிவாதம் இருந்தது என்பதை அவர்கள்மறந்துவிட்டார்கள். எவ்வாறயினும் இடதுசாரிகள் பங்கு பற்றாமையால் ஒரு பெரும் நன்மை உண்டானது. நாட்டிற் குழப்பமில்லை நல்லவகையில அமைதி. இரண்டொரு இடங்களிலே அசம்பாவிதங்கள் நடைபெற்றனஎன்பதுண்மை. ஆனாலும் அவற்றுக்குக் காரணர்கள் யார் என்பதுதான் கேள்வி.

### வேலை நிறுத்தம் ஆனல் வேலை நிகழ்ச்சி!

இந்த இரண்டொரு அசம்பாவிதங்கள் என்ற வகையிற்றுன் வீதிகளிலே மரங்களை வீழ்த்திய கருமம் உட்படும். வேலை நிறுத்தஞ் செய்தவர்கள் மரம் விழுத்தும் வேலை செய்யமாட்டார்கள். எனவே வேலைநிறுத்தஞ் செய்யாதவர்கள்தான் இந்த வேலையைச் செய்தார்கள் போலும்?

### பொதுவுடைமை முதல்வர் யார்.......?

இன்றைக்கு ஒன்று நாளைக்கு இன்னென்று இன்றைக்கு இவர் தலைமை நாளை அவர் தலை கொய்யப்படுதல். இந்த அரசியல் அதிர்ச்சி பொதுவுடைமை நாடுகளுக்குப் பொதுவிலக்கணம். உருசியாவின் சிறப்பிலக்கணம். இதுவரை சிற்றுலின் என்றவரே பொதுவுடைமைச் சிற்பிகளிற் சிறந்தவர் என்ற கொள்கை நிலவியது உருசியாவில். ஆனல் சென்ற வாரம் நடந்த பொதுவுடைமை மாநாட்டில் அது மறுக்கப்பட்டு இலெனினே இயக்கத்தின் இருதயமும சிரசும் எல்லாமும என்று தீர்ப்பளிக்கப்பட்டதாம். இலங்கை இடதுசாரிகள் இலெனின்காரார் சிற்றுலின் சாரார் என்றிருக்கின்றார்கள். எனவே இவர்களின் அரசியற் கொள்கை மாற்றம் எவ்வாறமையும் என்பது கவனிக்கப்படவேண்டியது!

# மொழி உணர்ச்சிச் சிறப்பு

—————:0:—————

## 'ஹர்தால்' காட்டிய காட்சி

யாழ்ப்பாணப்பட்டினத்திலும் யாழ்ப்பாணத்தின் பிற இடங்களிலும் எவர்க்கும் உணர்ச்சி உண்டாக்கக்கூடிய முறையில் ஹர்தால் நடைபெற்றது. கூத்துக்குள் கோமாளி என்ற முறையில் சிற்சில மூாணை நிகழ்ச்சிகள் சிற்சில இடங்களில் இடம் பெற்றனவேயன்றி மகிழ்வுக்குரிய அமைதி எங்கும் நிலவியது.

யாழ்ப்பாணத்திற் போலவே வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஏனைய இடங்களிலும் ஹர்தால் சமாதானமான முறையில் நடைபெறறதாம். மொழி உணர்ச்சி ஒன்றுமே இவ்வளவு ஒற்றுமையை உண்டாக்கியது என்று மககள் கூட்டம் கூட்டமாக நின்று பேசி மகிழுகின்றனர். மக்களுக்கிடையில் இவ்வளவு ஒற்றுமை உணர்ச்சியைத் தாய் மொழி உண்டாக்கிவிட்டதென்றால் தலைவர்கள் பிரதிநிதிகள் என்போரிடையில் இத்தகைய உணர்ச்சி உண்டாகமாட்டாதா? இவர்கள் ஒற்றுமையாகச் செயலாற்ற மாட்டார்களா? என்ற கேள்வி எங்கும் கேட்கப்படுகின்றது.

### திருவள்ளுவர் திருநாள்

வெள்ளவத்தை சைவமங்கையர்கழக மண்டபத்தில் மாசி 14௳ ஞாயிற்றுக்கிழமை (26-2-56) அகில இலங்கைத் தமிழ்ச் சங்கத்தாரால் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படும் என்று சங்கச் செயலாளர்கள் அறியத்தருகின்றனர்.

# சர்வோதய மகாநாடு

——————0—0——————

## செய்யவேண்டிய ஒழுங்கும் பிரயாண வசதியும்

மேற்படி மகாநாடு வருகிற மே மீ 22-ம், 23-ம 24-ம் திகதிகளில் சென்னைக்கு அணித்தாகவுள்ள காஞ்சிபுரம் என்ற இடத்தில் நடைபெறும். இந்த மகாநாட்டில் ஆசார்ய விநோபாஜி, ஜெயப்பிரகாஸ் நாராயணன்போன்ற பல காந்திய சர்வோதய இயகக ஊழியர்களும் இந்தியாவிலுள்ள பிரபலதேசியத் தலைவர்களும் சமுகமளிப்பார்கள். இந்தமகாநாட்டுக்குப் பல்வேறு இடங்களிலும இருந்து சுமார் 10000 க்கு மேற்பட்ட சர்வோதய அன்பர்கள் சமுகமளிப்பார்கள்.

சர்வோதய சமாசததில அங்கத்தினர்களாகசென்ற வருடம் தங்களைப் பதிவு செய்து கொணடவர்களுக்கும் புதிதாகச் சேருபவர்களுக்கும் குறித்த சர்வோதய மகாநாட்டுககுப்போக வர தனுஷ்கோடியிலிருந்து புகையிரதச் சலுகை கட்ட [illegible] இலங்கையில் இருந்து புதிதாகச் சேர்வோர் இம்மாத இறுதிக்குள் (கன்வினர், தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி, 48, ராஜாம்பேட்டைத்தெரு, காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்கு அல்லது) காரியதரிசி அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம், தீர்வேலி என்ற விலாசத்துக்கு எழுதிப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் இருந்து மேறபடி மகாநாட்டுககுச் செலபவர்களுக்காக விசேஷ பாஜி போன்ற மகான்களை ஒரு விசேட சந்திப்பிற்கும ஏறபாடுகள் செய்யப்படுகின்றது. அத்துடன் தென்னிந்தியாவிலுள்ள சில முக்கியமான காந்திய சர்வோதய இயக்க வேலைகள் நடைபெறும் இடங்களைப் பார்த்து வரவும ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. முக்கியமாக திருப்பூர் தஞ்சாவூர், காந்திக்கிராமம், கலலுப்பிட்டி, கடலூர் வேதாரண்யம் முதலிய இடங்கள் அடங்கும். தனிய மகாநாட்டிற் பங்குபற்றுவோருக்கு ஒரு வாரமும் குறித்த இடங்களைச் சுற்றிப் பார்த்து வருவோருக்கு இரண்டரை வார காலமும வேண்டும்.

இலங்கையில் இருந்து செலவோர் பிரதானமாக இந்த சர்வோதய யாத்திரையில் பல கிராமக்கைத்தொழில் வேலைகளையும், புரட்சிகரமான பூமிதான இயக்க வேலைகளையும் புதிய ஆதாரக கல்வி முறைகளையும் பொருளாதார சமுகநல சீர்திருத்த வேலைகளையும், பனை வெல்ல உற்பத்தித் திட்டங்களையும் ஏனைய கிராம அபிவிருத்தி வேலைகளையும நேரில் பார்த்துப் படித்து வரலாம் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் இருந்து செல்லவிருக்கும் அன்பர்கள் இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவார்களாயின் அது இந்த நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரிய வரப்பிரசாதமாகும். செலவு

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி ஆராய்ச்சியில் இன ஆராய்ச்சி

## ஈழத் தமிழ் மக்கள் சிங்களவரா? தமிழரா?

## ஈழநாட்டில் சிங்கள சாதி உருவானதெப்படி?

கலாநிதி ஏச். எம். டி. த சில்வா அவர்கள் இலங்கை டைம்ஸ் பத்திரிகையில் அரசாங்க மொழிபற்றி எழுதும் போது, காலத்துக்கேற்ற முறையில் வருங்கால மக்களுக்கு ஆங்கிலமே மிகுந்த நன்மை பயப்பதாகுமென்று வாதிக்கின்றார். அத்துறையில் வாதிக்கும்பொழுது பண்டைக் காலத்தில் ஈழநாட்டில் வசித்தவர்கள் யாவரும் ஒரு சாதியினரே என்றும் தமிழ் மக்களென வாழ்வோர் இந்திய தொடர்புகளால் தமிழ் மொழி பேசத் தொடங்கி மற்றொரு சாதியினராய் வாழ்கின்றனரென்றும் இன்னும் இத்தகைய பல கருத்துக் கிளர்ச்சிகளை உண்டாக்கக்கூடிய கூற்றுக்களையும் கூறிச் செல்கின்றார். அவற்றுள் ஆராய்ச்சிக்கேற்ற விசேடமானவை இங்கே தரப்படுகின்றன.

சிங்கள மக்கள் பல சாதிக் கலப்புடையவர்கள். எவர் ஒருவராயினும் தமது முன் தொடர்பைக் குறிப்பிடத்தக்க ஒரு குடும்பத்துக்கோ அல்லது சாதிக்கோ உரியதாகச்சொல்ல முடியாமலிருக்கின்றது. மிகப் பழைய காலந்தொடக்கம் இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து வந்த மக்கள் இலங்கையில் வாழ்ந்தனர் என்பது "விதிபோத"வின் கூற்று. அவர்கள் யாவரும் வேறுபாடு எதுவும் பாராது கலந்து வாழ்ந்தனர். ஆகையினாலே குறித்த ஒரு குடும்பத்துக்கு அல்லது சாதிக்குச் சேர்ந்தவர்களாக சிங்களமக்கள் தம்மைச்சொல்லக்கூடாது.

(அரச ஆசியசபை வெளியீடு 30, பக்கம் 318)

எதுவாயினும் ஒரு சாதி, ஒரு சமயம், ஒரு பாஷை உலகம் முழுதிலும் அதிகாரம் செலுத்த முடியாதென்பதை யாவரும் அறிவர். அதுபோலவே ஒரு மனிதன், அல்லது ஒரு குடும்பத்தினர், அல்லது ஒரு குழுவினர் பல பிரிவுகளுள்ள மக்கள் வசிக்கும் இலங்கையை ஆள முடியாது. எல்லா வேறுபாடுகளையும் சமாளிக்க வேண்டுமானால் ஒரு அரசாங்கம் எல்லோருடனும் ஒற்றுமையாகச் செயலாற்ற வேண்டும். பல வேறுபாடுகள் இந்நாட்டிலிருப்பதனால் ஒரு குழுவினரை, ஒரு சமயத்தவரை, ஒரு மொழியினரை மாத்திரம் திருப்திபண்ணும் ஒரு அரசாங்கத்தின்கீழ யாவரும் ஒற்றுமைப்பட முடியாது. பலாத்காரத்துக்கும் கொடுங்கோன்மைக்கும் ஒரு சுதந்திரநாட்டில் இடமிருக்க முடியாது. கடவுள் 'சமயம்' என்ற பெயரால் மக்களுக்கு இக்கண் விளைக்கும் சண்டைகள் தொடுத்தமைக்கும் சான்றுகள் சரித்திரத்தில் பலவுள.

மனு, புத்தர், கிறிஸ்து, முகமது முதலியோரால் ஆசியாவில் சமயங்கள் உண்டாக்கப்பட்டன. ஒருசமயத்தை யாராயினும் ஒருவர்மீது திணிக்கும் செயல் எங்கும் தோல்வியடைந்துவிட்டது. ஆகையினாலே, குறித்த ஒரு சமயத்தை ஒரு அரசாங்கம் ஆதரிக்கக்கூடாது.

இலங்கையில் வசிக்கும் பெருந்தொகையான மக்கள்

இந்தியாவிலிருந்து வந்து இங்கே வசித்த இயக்கர் நாகர் ஆகியோருடன் கலந்து சிங்களசாதி உருவாக ஏதுவாயினர்.

காலகதியில் இங்கே வசித்தவர்களும் இந்தியாவிலிருந்து வந்தவர்களும் தாங்கள் விரும்பினாலுமே தங்கள் தனித்தன்மையை நிலைக்கச் செய்ய முடியாதவர்களாயினர். காலகதியில் இவர்கள் யாவரும் ஒரு சமயத்தை அநுட்டித்து ஒரு மொழியைப் பேசி ஒரு சாதியினராகி சரித்திரத்தில் சிங்களசாதி என்று சொல்லப்படும் சாதியினராயினர். (சிங்களவர் சரித்திரம். ஜோன். எம். செனிவரத்ன பக் 5)

கிறிஸ்துவுக்கு 427 ஆண்டுகளுக்குமுன், பிதி அல்லது, இராசரட்ட, மாயரட்ட, உருகுண மாகாணம் என இலங்கை பிரிக்கப்பட்டிருந்தது. எல்லா மாகாணங்களிலும் சிங்களவரே வாழ்ந்தனர். அவர்களின் சமயம் இந்துசமயமாகவேயிருந்தது. பழையகாலத்தில் இலங்கையிலுள்ள இந்து அரசன் ஊர்வலத்தின்பின்னணியில் யானைமீதுள்ள தவிசுடன் கொண்டு செல்லப்பட்டான், (சிங்களக்கொடிகளும் முறைகளும். இ. டபிள்யு. பெரேரா முதல் பாகம் 2ம் பிரிவு)

இலங்கை அரசன் தனக்கு முந்திய அரசர்களைப்போல நாத, விஷ்ணு, முதலிய கடவுளரின் பொருட்டு நடத்தும் களியாட்டங்களைத் தன் பிரஜைகளுக்குக் காண்பிக்க விரும்பினான். வேறு பிரிவுகளிலுள்ள மக்களை வேறு வேறு கொடிகளுடன் ஒன்றாகக் கூட்டினான்.

கோயில்களிலுள்ள கடவுளரின் சின்னங்களை, நாட்டியகாரர், யானைகள், மேளங்கள் முன்னும் பின்னும் செல்ல ஊர்வலமாகக் கொண்டு வரச் செய்தான் ........ அரசன் இராசவரிசையுடன், [illegible] தின் (பெறஹெறா) [illegible] சென்று அரண்மனையை அடைந்தான்.

கிறிஸ்துவுக்குப் பின் 1747ம் ஆண்டுக்கும் 1780ம் ஆண்டுக்குமிடையில் கீர்த்தி சிறி அரசனுடைய ஆட்சிவரையில் புத்தசமயத்துடன் சிறிதும் தொடர்பில்லாத நாத, விஷ்ணு கதிர்காம, பத்தினித் தெய்வங்களாகிய நான்கு தெய்வங்களின் விழா (பெறஹெறா) நடந்து வந்தது. 1775ம் ஆண்டில் இத்தெய்வங்களின் சின்னங்களுடன் புனித புத்த சின்னமும் முதன் முதலாகக் கொண்டு செல்லப்பட்டது.

இம் மாற்றத்துக்கு பின் வரும் நிகழ்ச்சி ஏதுவாயது கீர்த்தி சிறி அரசன் சீயத்திலிருந்து புத்தகுருமாரை வரவழைத்திருந்தான். ஒரு நாள் மணிமுதலியவற்றின் சத்தத்தைக் கேட்டு அது என்ன என்று அவர்கள் வினவிய பொழுது அது மேலே குறித்த விழாவிலுண்டான சத்தம் என்று அறிந்தார்கள். புத்த மத மேன்மையே மேலோங்கியிருமென்று அவர்கள் நினைத்திருந்த கண்டிமாநகரில் இந்து சமயம் மேலோங்கியிருப்பதை அவர்கள் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லையாகையால் அவர்களுக்குக் கோபமுண்டாயிற்று. அவர்களைத் திருப்திப்பண்ணும் பொருட்டு தூதுவரை அனுப்பி புத்த சின்னத்தை எல்லாவற்றுக்கும் முன்னுக்குக் கொண்டு போகச் செய்தான்.

இந்து சமயத்தின் உரிமைகளை பௌத்த சமயம் எவ்வாறு அபகரித்துத் தனக்குரிமையாக்கியது என்பது இதனால் அறிய வருகின்றது.

பண்டைக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்தவர்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

### திருக்குறட் போட்டி

இலங்கைத் தமிழ்மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் திருக்குறட் போட்டியில் ஏறக்குறைய ஆயிரம்பேர் பங்குபற்றுகிறார்கள். வெற்றி பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்கு 20 இடங்களிலே 13-3-56 இல் தெரிவு நடைபெறும்.

தேர்வுக்கு நுழைவுச் சீட்டுகள் இம்மாதம் முடியுமுன் தேர்வுக்குத் தோற்றுபவர்கள் யாவருக்கும் அனுப்பப்படும்.

மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு எனும் முப்பிரிவிலும் முதல் மூன்றிடத்தைப் பற்றுவோருக்குத் தங்கப் பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும். வேறு பல பரிசில்களும் உண்டு. பரிசுகளயாவும் இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ்மறைக் கழகத்தின் நான்காவது திருக்குறள் மகாநாட்டிலே திருவள்ளுவர் திருநாளாகிய 24-5-56 வியாழக்கிழமையன்று வழங்கப்படும்.

## தமிழ்த் தொண்டாற்றிய தனிப்பெரும் புலவர்

## சுன்னாகம் குமாரசாமிப் புலவர் சரித்திரச் சிறப்பு

### நினைவு நாள் நடத்த வேண்டுகோள்

இப்புலவர் பெருந்தகையார் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் என்னுமூரிலே சைவ வேளாண்குல திலகராய் விளங்கிய ஸ்ரீ அம்பலவாணபிள்ளை அவர்களுக்கு அருந் தவப் புலவராகத் தோன்றினர். அப் புதல்வர் தம் குலதெய்வமாகிய மயிலணிக் குமாரப்பெருமான்மீது அன்பு பூண்டு குமாரசாமிப் புலவராய் வருவார் என்பதை உணர்ந்து போலும் அவரது இரு முதுகுரவரும் அவருக்குக் குமாரசாமிப்பிள்ளையென நாமகரணம் செய்தனர்.

அவர் இளமையில் வித்தியாரம்பஞ் செய்யப்பட்டு தமிழ் நெடுங்கணக்குப் பயின்று சொற்பயிற்சியும் வந்தபின் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கிலத்தோடு தமிழையும் கற்றனர். அங்கு படிக்கும் காலத்திற்றானே வேதாரணியம் நமச்சிவாய தேசிகரிடம் சமய தீட்சையும் பெற்றுக்கொண்டனர். பின்பு [illegible] பண்டிதரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நாகநாத பண்டிதரிடம் சமஸ்கிருத நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுக் கொண்டனர். அதன்பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடத்தும் கற்றுத் தெளிந்தனர். இவரது புலமையையும் விவேகத்தையும் கேள்விப்பட்ட சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தாம் ஏழாலையில் தாபி

நென்மயிலை
தி. செ. கோவிந்தசாமி

த்த பாடசாலைக்கு ஆசிரியராகக் கடமையாற்றும்படி செய்தனர். அப்போது இவருக்கு வயசு இருபத்திரண்டு. இந்த இளம் வயசிற்றானே பல கலைகளையும் கற்றதுமல்லாமல் பல இலக்கண இலக்கிய நூல்களையும் இயற்றியுள்ளார். கவிபாடும் வன்மையும் உடையவர். சமஸ்கிருதத்திலிருந்து பல மொழிபெயர்ப்பு நூல்களும் செய்தவர். இளமையிலேயே உள்ளத் துறவும் உடையவர்; அன்பு வாய்ந்தவர் — தமது குல தெய்வமாகிய மயிலணிக் கந்தப்பெருமானை உபாசனாமூர்த்தியாகக் கொண்டவர். இதற்போலும் தமிழ் மொழியையும் வடமொழியையும் நிலைகண்டுணர்ந்த இளஞாயிறு போன்றவராயினர். இவர் ஏழாலை வித்தியாசாலையில் உதவியாசிரியராகவும், தலைமையாசிரியராகவும் கடமையாற்றினர். அக்காலம் பல மாணவர்கள் இவரிடம் கல்வி கற்று பாண்டித்தியம் பெற்றனர். அவர்களுள் தெல்லிநகர் வித்துவான் சிவானந்தையரே அதிவிவேகியும் தலைமாணாக்கருமாவர். இவர் நீண்ட ஆயுளுக்கு இருந்திருப்பரேல் புலவர் பெருமை இமயம் வரைக்கும் பரவாதிருக்க முடியாது. புலவர் நீண்ட காலம் இல்லறம் புகாமல் நைட்டிகப் பிரமச்சாரியாய் இருந்து தொல்காப்பியம் - கலித்தொகை - இறையனார் களவியலுரை - சூளாமணி இலக்கணம் முதலிய இலக்கிய நூல்களும் ஊஞ்சல் பாமாலை முதலியனவும் வெளியிட்டவர்கள். பின்பு முருகப்பெருமான் திருவருளாந்தத் திருமணம் செய்து இல்லற தருமங்களை வழுவாது காத்து வந்தார்.

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை பற்றி ஆராய்ச்சி

# ஆனை வியாபாரத்துக்கு அறிகுறி

## சபைகள் சங்கங்கள் செய்யவேண்டியவை

(முற்றொடர்)

சங்கானையில் பழமையான குளம் ஒன்று இருக்கின்றது. இதை 'மண்டிக் குளம்' என அழைப்பர். இதைச்சுற்றிலும் வயல்கள் உண்டு. அந்நாளில் இக்கிராம மக்கள் ஓலை முதலிய உணவுகளைக் கொண்டு வந்து, யானை வியாபாரிகளுக்கு விற்றனர். அக்காரணங்கொண்டு அவர்களின் வயலுக்கு "ஆனைப் பாகன் வயல்" என்றுபெயரிட்டழைத்தனர். இவ்வயல் மேற்சொல்லியகுளக் கரையில் கிழக்குப் பக்கத்தில் உள்ளது.

போத்துக்கீசியரின்கினைவாக இன்று இருப்பது அன்னார் கட்டிய ஒரு கட்டடம். இக்கட்டடம் சங்கானை நகர்காவலா நிலையத்திற்கு முன் பக்கத்தில் உளது. இதன் சில பகுதிகள் இடிந்து போனாலும் மிகுதியும் அழிந்து போகாமல் அதைத் திருத்திப் பாதுகாத்து வருகிறது எங்கள் அரசாங்கம். சங்கானையிலிருந்த சில சைவத் தமிழன்பர்கள் தென்னிந்தியா சென்று, மடம் கட்டிச் சிவதொண்டு செய்தனர். அம்மடம் இன்றும் இந்தியாவில் உள்ளது. அத்தொண்டரின் வழித் தோன்றல்கள் இப்போது சங்கானையில் இருக்கிறார்கள். அவர்கள் 'மடத்தார்' என்று அழைக்கப்பட்டு வருகிறார்கள்.

இக்கிராமத்தில் "மாலிய வத்தை" என்ற சிறுபகுதியிருக்கிறது. இது சிங்களப் பெயராகவே காணப்படுகிறது. சிங்கள மொழியில் 'வத்தை' என்றால் தோட்டம் என்று பொருள்படும். ஈழத்தின் முதல் புத்த அரசனான தேவநம்பியதிசன், கதிரமலை என்னும் கந்தரோடையில் 'பாசினமரும' விகாரையைக் கட்டிய பொழுது அங்கு குடியேறிய மக்கள் சங்கானையில் குடியேறி, மாலியவத்தை என்ற பெயரை இட்டிருக்கவேண்டும். கொழும்பில் இருக்கும் "மாளிகாவத்தை" என்ற இடத்தின் பெயரை இதற்கு இட்டிருப்பார்கள். காலடைவில் மாலிகாவத்தையாக மாறியிருக்கலாம்.

இக்கிராமத்தின் ஒருபகுதியில் சுடுகாடு உண்டு. இச்சுடுகாடும் அதனைச் சூழ்ந்துள்ள வயல்களும் 'கரைச்சி' என அழைக்கப்படும். இக்கரைச்சிப் பகுதியில் உள்ள வயல்வெளிகள் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாயிருக்கவில்லை. பிற்காலத்திலேயே திருத்தப்பட்டன. எனினும் கரைச்சிப் பகுதி உவர்ச்சத்துள்ளதாகவே யிருக்கிறது. ஏறக்குறைய 70 வருடங்களுக்குமுன் அராலிக் கடல் பெருக்கெடுத்ததாகவும், கடல்நீர், சண்டிருப்பாய், ஐயனார் கோயில், வெல்லில் சுப்பிரமணியர் கோவில்வரை வந்ததாகவும், கோயிலுக்குக் கிட்ட வந்தபொழுது வெடிச்சத்தங் கேட்டதாகவும், அதன்பின் நீர் வற்றியதாகவும், கோயில் வீதிகளில் மக்கள் மீன் பிடித்ததாகவும், இது

திரு. ப. இ. தேவராசா
கொழும்பு

தங்களுக்குத் தெரியுமென்றும் இங்குள்ள முதியோர் சிலர் கூறுகின்றனர். இக்கடற்பெருக்குக்குப் பின்புதான் இப்பகுதிநிலம் உவர்ச் சத்துள்ளதாக மாறியிருக்கவேண்டும். வேளாண்மை குறைவாக இருந்து வருவதற்கும் இதுவே காரணம்.

இங்கு இருக்கும் அங்காடி (சந்தை) 300 வருடங்கட்கு முன் ஏற்பட்டதாக அறிய முடிகிறது. இது இப்பொழுது பெரியதாய்ச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு இருக்கிறது. சுன்னாகச் சந்தைக்கடுத்ததாக அப்பகுதியில் உள்ள பெரிய சந்தை, சங்கானைச் சந்தையேயாகும். காரைநகர், பண்ணாகம், சுளிபுரம், வட்டுக்கோட்டை, கட்டுடை, சண்டிருப்பாய், இணுவில், உடுவில் முதலிய இடங்களில இருந்து இங்கு கொள்வனவுவிற்பனவுக்கு வருவார்கள். போத்துக்கீசர்காலந்தொட்டே வழங்கும் சுவையான மொழித்தொடர் ஒன்று உண்டு. அம்மொழித்தொடர்,

"சங்கானைச் சந்தையிலே
சுங்கானைப் போட்டுவிட்
[டேன்
பார்த்தெடுத்துத் தந்தவர்க்குப்
பாதிச்சுங்கான்கொடுப்பேன்"

என்பதாகும். வேறு பல சந்தைகள் இருந்திருக்கக் கூடும். ஆனால் சங்கானைச் சந்தை சிறந்திருந்தபடியாலும் ஆனை வியாபாரம் செய்ய இப் பகுதியில் மக்கள் அதிகமாக வந்ததனாலும் இப்பாடல் தோன்றியிருக்கக்கூடும். இப்பாடலும் சந்தையின் பழமையைக் குறிக்கின்றது. இன்றும் இப்பாடலை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் கிராம மக்கள் பாடுவதைக் கேட்கலாம்.

இக் கிராமத்தின் இன்னொரு பகுதிக்குப் பெயர் 'சிலம்புப் புளியடி'. சிலம்பவித்தை பழகியதனால் அப்பெயர் உண்டானதென்று எண்ணிக்க இடமுண்டு.

யாழ்ப்பாணத்தில் ஆறு இல்லை. ஆனால் சங்கானையில் ஒரு ஆறு உண்டு அவ்வாறு எதுவெனில், "வழுக்கி ஆறு" எனப்தாகும். மாரி காலத்தில்தான் அதில் நீர் இருக்கும்.

இங்கு நான்கு பெரிய சைவ ஆலயங்கள் உள. அவை செக்கற்படை மகாதேவப்பிள்ளையார், அரசடி வயிரவர், வெல்லில் சுப்பிரமணியர், கூடத்துள் அம்மன் என்பனவாகும். கிறீஸ்தவர்களுக்கு ஒரு தேவாலயமும் மகமதியர்களுக்கு ஒரு பள்ளிவாசலுமுண்டு. மதச் சச்சரவுகளுக்கு இடங் கொடாமல் எம்மதமும் சம்மதம் என வாழ்ந்து வருகின்றனர் இக்கிராம மக்கள்.

இங்கு வலிகாமம் மேற்குக் காரியாதிகாரியின் காரியாலயம், நகர்காவலர் நிலையம், அஞ்சலலுவலகம், வாசிகசாலை, படமண்டபம் சிறியமருத்துவசாலை வைத்தியசாலை என்பன உள. ஓர் பெரிய வைத்தியசாலைக்கான கட்டட வேலை இப்பொழுது நடைபெறுகின்றது.

இக்கிராமத்தில்பல்வேறு சங்கங்களும் கழகங்களும உள. இவர்கள் ஒற்றுமையாகவும், 'பிறர் நலமே தன் நலம்' என்ற பெருநோக்குடனும் கருமமாற்றுவாராயின் இக்கிராம மக்களின் வாழ்க்கையை இன்னும் உயர்ந்தநிலைக்குக் கொண்டு வருவார்களென்பதில் சந்தேகமில்லை.

---

### சேர். ஜோன் கூறுவ

### தேசத் துரோகிகள்

களனியாவில் நடந்த ஐக்கியதேசியக் கட்சியின் சிங்கள மொழிக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசும்போது பொதுத் தேர்தலில் மக்கள் சொல்ல வேண்டியதைச் சொன்னபின் நாட்டைப் பிரிக்கவும் அரசியல் அமைப்பை அழிக்கவும் நினைக்கும் தேசத் துரோகிகளை இராசதுரோகத்துக்குத் தண்டிக்கவேண்டிய முறையில் முறையிட்டு சேர் ஜோன் கொத்தலாவல சொன்னாராம்.

---

### மொழி ஆராய்ச்சியில் இன ஆராய்ச்சி

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

வேடர் உட்பட யாவரும் சிங்களவரேயாவர். வடபகுதியில் யாழ்ப்பாணம் என்ற இடத்தில வசித்தவர்கள் இந்தியர், அரேபியருடன் வியாபாரத் தொடர்புடையவர்களாயிருந் தமையால் தமிழ்மொழியைப் பேசினார்கள்- எனவே தமிழ் மொழி அவர்களின் கலாசார மொழியாயிற்று. இப்படியே கரையோரத்தில் மட்டக்களப்பு, நீர்கொழும்பு, சிலாபம் முதலிய இடங்களிலும் நடந்தது. ஆகையினாலே யாழ்ப்பாணத்தமிழர் இந்தியர்களல்ல சிங்களவரேயாவர். .... .... ....

இராசரட்டவிலுள்ள சிங்கள மக்கள் தமிழ்பேசுகிறார்கள் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார்கள். மாயரட்ட உறுகுணப்பகுதிகளிலிருந்து எவ்வாறு அவர்கள் பிரிக்கபடலா மென்று தெரியவில்லை. .... .... ....

வருங்கால மக்கள் விஞ்ஞானப் பொருளாட்சியை அறிந்து தம் கடமைக்குத் தகுதியுடையவர்களாக வேண்டுமானல் அவர்கள் ஆங்கிலம் படிக்கவேண்டும். மொழிபற்றிய தீர்மானம் செய்யும் பொறுப்பை பல்லாண்டுகளாகப் பிழையான வழியில் அரசியல்வாதிகளால் செலுத்தப்பட்டுவந்த அறிவுகுறைந்த பெரும்பான்மையான பொதுமக்களின் கையில்விடக் கூடாது. இலங்கையின் எதிர்காலம் அதிலேயே தங்கியிருப்பதால் அது அறிவு சிறந்த பெரும் சிந்தனையாளராலே தீர்மானிக்கப்படவேண்டும்.

---

### மரண தண்டனை நீக்கும் தீர்மானம்

மரண தண்டனையை நிறுத்தவேண்டுமென்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றதாம்.

### சிங்களமே தனிமொழியாம்

களனியாவில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சி மகாநாட்டில் சிங்களமே தனி அரச கரும மொழியாக வேண்டும் என்னும் பிரேரணை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாம்.

புதிய பாராளுமன்றம் கூடியபின் செய்யும் முதல் வேலை சிங்களமே தனி அரச கரும மொழியாகும் என்னும் தீர்மானத்தின்படி வேண்டிய திருத்தத்தை அரசியல் அமைப்பிற் செய்வதாகும்என்று சேர். ஜோன் கொத்தலாவல பேசியபோது கூறினாராம்.

### இலங்கை- இந்திய உடன்படிக்கை

இலங்கை இந்திய உடன்படிக்கையைக் கையாளுவதிற் பல இடைஞ்சல்களிருக்கின்றன என்றும் எனவே அதை கிடப்பிடவேண்டியதாயிருக்கின்றதென்றும் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கெழுதியது. இதற்கு மறுமொழியாக இலங்கை அரசாங்கத்துக்குப் பண்டித நேரு அவர்கள் எழுதியபோது உடன்படிக்கையைக் கைவிடும் நோக்கம் இந்தியாவுக்கில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார் என்றும் இதைக் கையாளுவதிற் காணவரும் இடைஞ்சல்களை நீக்கும் வழிவகைகளைக் காண இருபகுதியும் முயலக்கூடுமெனறும் கூறப்படுகின்றது.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

6,63,13,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

[illegible] 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் [illegible] வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு 100 [illegible] கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் [illegible] வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

கைநிலுவை சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேஷமப் பணம்.

சேஷமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா மாங்க தீர்த்தம்

வரும் மாசி மீ 14-ந் உ (26-2-56) ஞாயிற்றுக் கிழமை மக நட்சத்திரம். வியாழ பகவான் சிங்கராசியில் அமையும் புண்ணிய நாள். பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை, கும்பகோணத்தில் நடைபெறும். இத் தீர்த்தவிழா "மாமாங்கம்" என அழைக்

திரு. நா. சேனாதிராசா

கப்படும். இந்த விசேஷ தீர்த்த விழாவை, வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும், சைவர்களும் வைஷ்ணவர்களும் கொண்டாடுவார்கள். இலங்கையில் வாழும் சைவர்களாயுள்ள நாம், முக்கியமாகக் கொண்டாடவேண்டும். சமய சம்பந்தமான விஷயங்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்பட்டன. கும்பகோணம் போன்ற மகத்துவமான தலங்கள் இவ்விலங்கைத் தீவில் பலாவி, திருவடிநிலை, கீரிமலை என்பனவாகும். இப் புண்ணிய தலங்களிலும் சமுத்திரத்திலும் சைவர்கள், வைஷ்ணவர்கள் ஸ்நானஞ் செய்து அம்மை அப்பனைப் பூசித்து வணங்கி உய்யலாம். "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமான சுவாமிகள் சொன்னது போல ஆகும் ஆனதால் இந்துக்களாயுள்ள சைவர்களும், வைஷ்ணவர்களும், இந்த விசேஷ மகத்துவமான தீர்த்தவிழாவைக் கொண்டாடுமாறு வேண்டுகிறோம்.

## திருக்கேதீச்சரத்தில்

திருக்கேதீச்சரத்தில் 26-2-56 ஞாயிற்றுக்கிழமை மஹாமகத் தினத்தன்று சுவாமி அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும். பின்பு சுவாமி பாலாவியில் தீர்த்தமாடி வீதிவலம் வந்து அடியார்களுக்குக் காட்சி அளித்தருளுவார்.

திருக்கேதீஸ்வரப் பாடசாலை மாணவ, மாணவிகள் தேவார பாராயணம் செய்வார்கள். அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும் என்றும், கொழும்பு கண்டியில் உள்ள பிரபல வர்த்தகர்களான திரு V. O. குப்புசாமி செட்டியார் சகோதரர் (அண்ட்பிறதர்ஸ்) தாபனத்தார் நன்கொடை அளித்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி விக்கிரகம் சமீபத்தில் திருக்கேதீச்சரம் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது, இது வரை இங்கு சுப்பிரமணிய சுவாமி இல்லாத குறையை சுமார் ரூபா 8000/- (எண்ணாயிரம் ரூபா) செலவு செய்து நிவர்த்தி செய்திருக்கிறார்கள் என்றும் திருப்பணிச் சபைக் காரியதரிசி அறியத்தருகின்றார்.

## சர்வோதய மகாநாடு

2-ம் பக்கத்தொடர்ச்சி

ஒருவருக்கு சுமார் 150,200 ரூபாவுக்குள் முடியும் என மதிப்பிடப்படுகின்றது. வழக்கமான அனுமதிச்சீட்டுடன் (பாஸ்போட்டுடன்) இந்திய அரசாங்க அனுமதியும் (விசா) பணம் கொண்டு செல்ல உத்தரவும், வைத்தியப் பத்திரமும் வைத்திருப்பவர்கள் குறித்த சர்வோதய யாத்திரைக்குத் தகுதியானவர்கள்.

சர்வோதய மகாநாட்டுக்குச் செல்வோர் இலங்கையில் இருந்து வைகாசி (மே) மாதம 19-ந் திகதியாவது புறப்படவேண்டும் என்பதும "பாஸ்போட்" முதலியவற்றை எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகள் இப்போதே செய்ய வேண்டும் என்பதும் கவனிக்க வேண்டும். மேலும் வேண்டிய விபரங்களை நம்மிடம் அறிந்துகொள்ளலாம் என்று நீர்வேலி காந்திய சேவாசங்கக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அறியத் தருகின்றார்.

# சிங்கள மொழித் தீர்மானம்

## வஞ்சகச் செயல்களின் மிஞ்சிய நிலைமை

## நிலைமைக்கேற்ற ஆக்கவேலை தலைவர்கள் கடன்

சிங்களமே தனி அரசாங்க மொழி ஆகல் வேண்டும் என்னும் பிரேரணையை ஏகமனதாக அங்கீகரித்துச் சரித்திரப் பிரசித்திவாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மகாநாடு முடிவடைந்துவிட்டது. அது பல நியாயங்களால் சரித்திரப் பிரசித்திவாய்ந்ததாயிருக்கும். ஏனென்றால் அந்நாளிலேதான் அரசியற் சந்தர்ப்பவாதமும துவேஷ குணமும அதிகார பீடத்துக்கு உயர்த்தப்பட்டன. அந்நாளிலேதான் அதிகாரத்தைக் கைவிடாது வைத்திருக்கும் பெருவிருப்புக் காரணமாக இன்று வரையும ஐக்கியத்தையே கடைப்பிடித்து வந்ததாக நடந்துவந்த ஒரு கட்சி அதன் ஐக்கியத் தன்மையை இழந்து ஒரு தனிச்சாதியின் சங்கமாய் மாறியதாகும். அந்நாளிலேதான் அதிகாரமே அடிப்படைக்காரணமாக நாட்டின் முன்னணியிலுள்ளோர் அறிவுடைமையுடன் பொறுமை வாய்ந்த வழியை மக்களுக்குக் காட்டுதற்குப் பதிலாய்த் தாங்களே நீதியில்லாத உணர்ச்சியெழுப்பும் பிற்போக்கான பேச்சுக்களைப் பேசு

வழக்கறிஞர்

C. T. நவரத்தினம் அவர்கள்

வோராயும் பாமர மக்களால் வழி நடத்தப்படுவோராயும் மாறினார்கள். ஒற்றுமையும அமைதியும் நிலவிய ஒரு நாட்டிலே ஒரு தொகுதியினர் தங்கள் வலிமிகுதிபற்றிச் செருக்குற்று எல்லைகடந்து நினைத்து ஒற்றுமை இன்மையையும அமைதியின்மையையும் உண்டாக்கிய நாளாக அது சரித்திரத்திலன்கு இடம்பெறலாம்.

தமிழ் மக்களுக்கு அது ஒரு துக்க நாளாகும. ஐ. தே. கட்சி மகாநாட்டில் நிகழ்ந்த பேச்சுக்கள் அவர்களுக்கு அதிசயமானவையாய் வெளிவந்திருக்கின்றன. அவற்றை அவர்கள் அமைதியாக ஆராய்தல் வேண்டும. அப்படி ஆராய்ந்தாலதான் சுதந்திரம் பெறுதற்கு முன்பே ஆரம்பமாகி நடந்து வந்த நீண்ட வஞ்சகச் செயல்கள் மிஞ்சியநிலையைந்திய மையை இப்பொழுது செய்த செயல் காணத் தருகின்றது என்பதை அவர்கள் உணரக் கூடியதாயிருக்கும். தமிழ மக்களுக்குப் பிழையான நம்பிக்கை உணர்வை உண்டாக்கி அவர்களை அமைதியாயிருக்கச் செய்து, தமக்கு வேண்டிய அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, தமிழ்மக்கள் துணையற்றோராய் நிற்கும் தருணத்திலே விரும்பியவாறு செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினாலேயே இதற்குமுன் சிங்கள மொழி தனி அரசாங்க மொழியாக்கப்படவில்லை என்பது திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. கன்னங்கரா ஆகியோருடைய பேச்சுக்களிலிருந்து நன்கு அறிய வருகின்றது.

சாதி சமய வேறுபாடின்றி யாவருக்குமே முதல் மந்திரியாயிருக்கின்றாரென்று தமிழ் மக்களாற் பாராட்டப்பட்ட முதல்மந்திரி சிறுபான்மையரின் உரிமைகளைப்பற்றிச் சிந்தியாது திடீரென ஒரு சாதியினரின் உரிமைக்காகப் பேசுபவராய் வந்தமை மிகவும் வருந்தவேண்டிய தொன்றாகும். அவருடைய முழுப் பேச்சிலும் தமிழ்மக்களுக்கு எதுவாயினும் ஒரு வேண்டுகோளாகவோ விளக்கமாகவோ உள்ள ஒரு சொல்லாயினும் இருக்கவில்லை. அதற்குப்பதிலாய்ப் பயமுறுத்தும் சொற்கள் நிறைந்திருந்தன. அவருடைய பேச்சில் அபசகுனமான ஒரு வசனமிருந்தது. அது, "தமிழ் மொழியையும் தமிழ்க் கலாசாரத்தையும் அழிப்பதில் நாங்கள் பற்றுள்ளவர்களாயிருக்கவில்லை" என்பதாகும். யாவருக்கும் முதன்மந்திரியாயிருப்பதால் தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டியது அவருடைய கடன். அப்படியிருப்பதால், அவர் கூறிய வசனம ஒரு தீய தொடர்புடையதாகத் தோன்றுகின்றது. ஏனென்றால் ஒரு நாட்டின் அல்லது ஒரு சாதியினரின் சுதந்திரத்தைத் தாக்க நினைத்தபோதெல்லாம் இச்சொற்களையே ஆண்டுவந்திருக்கின்றார் ஹிட்லர்.

எது எப்படியிருந்தாலும் என்ன என்ன ஆபத்துக்களும் துன்பங்களும தமிழ் மக்களை எதிர்பார்த்திருக்கின்றன என்பது இனறு வெளிப்படையாய் விளங்குகின்றது. தமிழ் மொழிக்குச் செய்யும் நீதியீனத்தால் தமிழ்மக்கள் எவ்வளவு தாக்குண்டிருக்கின்றார்களென்பதை பூரண திருப்தியாக நடந்த "ஹர்த்தால்" நன்கு காட்டிவிட்டது.

இப்பொழுது செய்யத் தகுந்ததைச் செய்தல் தலைவர்களின் கடமை. தலைமைப் பதவிச் சண்டைகளையும் போட்டிகளையும் ஒருபக்கத்தில் வைத்துவிட்டு அவர்கள் யாவரும் சந்தித்து ஈழத் தமிழ்மக்களின் பிறப்புரிமைகளைப் பாதுகாக்கவும, சிங்கள சாதியார் வருகைக்கு நெடுங்காலத்துக்கு முன்பே சரித்திரத்துக்கு அப்பாற்பட்ட காலம் தொடக்கம் தமிழ் மக்களுக்குச் சொந்தமாயிருந்த இந்நாட்டில் அவர்கள் கீழான அந்நியராகவும கள்ளக் குடியேற்றக்காரராகவும நடத்தப்படுவதைத் தடுத்துப் பாதுகாப்புச்செய்யவும் வேண்டிய வழிவகைகளை வகுத்தல் அவர்களின் கடமையாகின்றது.

"மனத்தொடு வாய்மை
மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை"

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 26—2—56 —— 3—3—56

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உத்தியோக கருமங்களுக்கு நல்ல வாரம், சொந்தப் பக்கத்தில் எல்லாம் நல்லாயில்லை. தேகசுகம் அதிகம் நல்லாயிராது. வாரத்தின் கடைசிநாள் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம பாதம்.

செலவு அதிகமாயிருந்தபோதிலும உமமுடைய தேவைகளுக்குப் போதிய வருமானம் வரும். விசேட கருமங்களைச் சிறிது காலத்துக்குப் பின்போடவும். தேகசுகம சுக்கலாகவே தொடர்ந்திருக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம, 3,4 திருவாதிரை, புனர்பூசம 1,2,3

குடும்பச் சூழலில் சில குழப்பங்களுண்டாகும ஆனால உமமுடைய உத்தியோக கருமங்களை நீர் முன்னேற்றலாம். நணபர் அதிக உதவியாயிருப்பர்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம பூசம் ஆயிலியம்.

உம்முடைய முயற்சிகள்மூலம் இந்தவாரம் நீர் அதிக இலாபம பெறுவீர். சில வழக்குகள் உண்டாககூடும் ஆனால் நீர் சித்தியெய்துதல் நிசசயம். பகைவர் அழிவுக்குமிடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தி ரம், 1ம் பாதம்.

ஒரு தொந்தரவான வாரம், விசேட காரியங்களில் எந்த ஒரு தீர்மானத்தையும் செய்யமாட்டாதிருப்பீர். சுகவீனங்களுக்கு மிடமுண்டு. இரகசியப் பகைவரைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்,

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம பாதம.

இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்கிடமுண்டு. ஆனால் உமமுடைய முயற்சிகளில் நீர் சித்தி பெறுதல நிசசயம கண்டங்களை நீர் பொருட்படுத்தாது விடலாம. தனலாபம் நிசசயம

**துலாமராசி** சித்திரை 3,4ம் பாதம. சுவாதி விசாகம 1,2,3ம் பாதம

பணநிலைமைகள் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், உமமுடைய சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். உத்தியோக சித்தியும நிச்சயம.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணக்கருமங்களுக்குநல்லவாரம். ஆனால் வேலை கூடுதலாயிருக்கும. சுற்றோரில இடைவிடாத சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்

ராடம் 1 பாதம்

இந்தவாரம் உம்மோடு போட்டியிடுவோரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். நண்பரும் இனத்தவர்களும் அதிக உதவியாயிருப்பர். உமது வருமானமும் கூடும்,

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம.

வாரத்தின் முதல் இரு நாட்களும் அதிக தொந்தரவானவையாயிருக்கும். இந்த இரண்டு நாட்களிலும் சண்டைகளையும் புது முயற்சிகளையும் தவிர்க்கவும் வாரமிகுதி நல்லாயிருக்கும், ஆனால் உமக்கு ஆறுதலிருக்கமாட்டாது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4 பாதம, சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு ஞாயிறும் திங்கள் காலையும் நலதாயிருக்கும் திங்கள் மாலையும் செவ்வாய் புதனும் நிலைகுலைக்கும். உமக்கு ஆறுதலிருக்கமாட்டாது. சிறு சுகவீனங்களுக்குமிடமுண்டு. வாரமிகுதி நல்லாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இந்தவாரம் உம்முடைய முயற்சிகளில் அதிக இடையூறுகளை நீர் முன்னிடுவீர். இவைகளை நீக்குவதிலும் நீர் வருத்தப்படுவீர், புதன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் எதிர்காலம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

பொருள்களாகப் பார்க்கின்றனர். ஐக்கிய முன்னணி பற்றிப் பலபட்ட பேச்சுக்கள் அடிபடுகின்றன. இருபத்தொரு நாள் அடைகாத்தும் குஞ்சு பொரிக்க முடியவில்லை. எல்லாம் கூழாய்ப் போயது. வெண்ணெய் திரண்டுவரும் நேரத்தில் தாழி யுடைந்ததோ? உடைபட்டதோ? என்னவானாலும், எல்லாம் பாழாய்ப் போயிற்று. இரண்டு இண்டாக்கி காட்டைச் சின்னபின்னப் படுத்தப் பார்க்கிறார்கள் சிலர். பிறகு முன்னணி, இப்பொழுது பின்னணி என்கிறார்கள் இன்னுஞ் சிலர். தண்டாடினுலென்ன தொத்து வைத்தாலென்ன, "அத்தத்தின் முடியும்வகை அடியேற்குத் தெரியுமோ?" என்றான் சகாதேவன் கிருஷ்ணனுக்கு. அதுபோலத்தான், இறுதியில் என்ன நடக்குமோ யார் கண்டார்? நடப்பது நடக்துதானே தீரும். எங்களுக்கு முன்னணி, பின்னணி சமஷ்டி ஒன்றும் இப்ப வேண்டாம். இந்தத் தேர்தலில் அடிபட்டுப் பார்க்கிறவர்கள் அடிப்போகட்டும் பாராளுமன்றத்திற்கு.

மக்கள் தரபனவொன்றை—தேசிய மகாசபை (National Assembly) ஒன்றை அமைத்துவிட்டால் யாரும் நினைத்தபடி செய்யமுடியாது, ஏமாற்றமுடியாது மக்களை. அப்போதுதான் எல்லாரும் வழிக்கு வருவார்கள். பல நாடுகளில் இவ்விதமான சபைகள் நல்ல பயனளித்து வருகின்றன. அதற்கு எல்லாரும் அமைக்கே ஆகவேண்டும். அமையாதவர்களை வெளியேற்றிவிட வேண்டியதே.

மக்களே தீர்மானிக்கட்டும்

தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகைகள் மூலமாகவும் பிறவற்றின் மூலமாகவும் வெளிப்படுத்துந் தலைவர்கள், முடிவுரைகளில் இதற்குத் தமிழ்பேசும் மக்களே முடிவு செய்யவேண்டும். "தீர்மானிக்கவேண்டும்". "தீர்மானிக்கட்டும்" "முடிவு செய்யட்டும்" என்று சொல்லுகின்றார்கள். இப்படியாக இவர்கள் மக்களைத் திணறடித்து அவதிக்குள்ளாக்கப் பார்க்கின்றார்கள்.

நடக்கட்டும்

தமிழரசு-தமிழர் மாநாட்டை, தமிழ்காட்டை, முன்னணியைத் தனிப்பட்டவர்களைப் பார்த்துத் தமிழ்பேசும் சமூகம் வருத்தப்படுகின்றது பரந்து விரிந்து-பண்பட்ட தமிழ்த் தலைவர்கள் எல்லாவற்றையும் பண்பட்ட பாடாக்கிவிட்டார்கள். திரிசிங்கள பொருமை பதக்கம்கூடக் கொடுத்துவிட்டது. என்செய்யலாம்; பெரும்பாலும் நடந்து தேய்ந்த ஒற்றையடிப் பாதையிலேதான் நடக்க விரும்புகின்றார்கள், நடக்கட்டும்.

கேட்கவேண்டியதில்லை

கறந்தபால் முலைக்கேறுது நடந்தது நடந்தாய்விட்டது. போன புத்தியை ஆனைகட்டி இழுத்தாலும் வாராது. போனதுபோகட்டும், இனியாவது புத்தியாய்வாழவேண்டும். வாழவழி காணவேண்டும். கண்மூடி மௌனியாக இருத்தல்கூடாது. இன்னும் காலம் போகவில்லை. இப்படி ஒரு தாபனத்தை அமைத்தால் தலைவர்கள் சொல்வதை நாங்கள் கேட்கவேண்டியதில்லை. "நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்கின்றோம்" என்று வழிக்கு வருவார்கள். அப்போதுதான் தலைவர்கட்கிடையேயுள்ள குரோதங்கள் விரோதங்கள் குறுகிய எண்ணங்கள் நீங்கும். நல்ல விசாலமான சேவை மனப்பான்மை யோங்கும், சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்களைக் கண்டுபிடிக்கலாம். தமிழ்பேசும் இனத்தின் உரிமைகள் மொழி, கலை, கலாசாரம் யாவற்றையும் பாதுகாக்கும் வழி பிறக்கும் சுதந்திரமும் பெறுமதி யுடையதாகும். அது கில்பெற்றும் விளங்கும். பயமுறுத்தி ஏமாற்றிப் பணங் கொடுத்து வாக்குச் சீட்டுப் பெற்றுப் பின்னர் பிழை செய்யுந்தன்மை மாண்டுமடியும். இப்போது தாண்டவமாடும் பணநாயகம் போய் உண்மைச் சனநாயகம் தோன்றும்.

எல்லாம் சரியாய்விடும்

ஆதலின், தமிழ்பேசும் நண்பர்களே! அன்பர்களே! பெரியோர்களே! எண்ணிப் பாருங்கள்! எங்களை எங்களின் எதிர்காலத்தை! எதிர்காலச் சந்ததியை! உறக்கத்தை உதறித்தள்ளுங்கள். யாருக்கு வந்த விருந்தோவென எண்ணாதீர்கள்! ஒன்றுபடுங்கள், மக்களின் முன்னணியே வேண்டியது! தளர்ச்சி கொள்ளாதீர்! கிளர்ச்சி செய்யுங்கள்! ஆக்குங்கள் வாசகாளர் சங்கத்தை. தொண்டாற்றுங்கள எல்லாம் சரியாய்விடும்.

"என்றும் தமிழ் மக்கள் யாவரும்
ஒத்திணங்கி
ஒன்றித்து நின்றால உய்வுண்டாம்—
அன்றெனில்,
மானம்போம் நாடுபோம் மானிட
வாழ்விற்குரிய
தானம்போம்யாவும்போம தாழ்ந்து"

## இந்திய—கோவா எல்லையில் பாடிகாவலர்

இந்திய—கோவா எல்லையில் கோவா பாடிகாவலர் (பொலிசார்) படையினர் சட்டவிரோதமான செயல்களைச் செய்கின்றனர் என்பதனால் அத்தகைய செயல்களைத் தடுக்க இந்திய பாடிகாவலர்படையினரை நிறுத்திச் செய்திருக்கின்றார்களாம்.

# தமிழ்த் தொண்டாற்றிய ... ... ...

—0—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீல ஸ்ரீ நாவலர் பெருமானை இளமைக் காலத்தில் அபிமான குருவாகக் கொண்ட காரணத்தினால் வேதாந்த உபநிடதங்களையும் சமய சாஸ்திரங்களையுந் திருமுறைகளையுந் தாமே உளங்கொளக் கற்றுத் தெளிந்து சைவச் சொற்பொழிவுகளும் ஆற்றியுள்ளார். இவரது செந்தமிழறிவை ஒருவராலும் அளவிட்டுக் கூறமுடியாது. இவரைத் தமிழ்த்தொண்டாற்றிய புலவர் என்று கூறுவர். இவர் செந்தமிழைப் பிளிந்தெடுத்த சைவசித்தாந்தியுமாவர். இவர் வரலாறு கூறப்போந்த புலவர் மாணவரும் மகாவித்வானுமாகிய சிவஸ்ரீ கணேசஐயர் அவர்கள் இவர் தமிழ்ப் பாஷையை விருத்தி செய்ததேயன்றி வித்தியாசாலைகளிலும் ஆலயங்களிலும் பிற ஊர்களிலும் பிரசங்கங்கள் செய்து சைவத்தையும் பரிபாலித்து வந்தார், இன்னும் சைவசமய விருத்தியின் பொருட்டும் தமிழ் விருத்தியின் பொருட்டும் பற்பல விஷயங்களை எழுதிப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தியும் வந்தாரெனவும் சரித்திரத்தில் கூறியுள்ளார்கள்.

பாடசாலையை விட்டு தமதில்லத்திலும் வகுப்பு வைத்து நடத்திவந்தனர். அதிற் படித்த மாணவருள் வித்துவான் கணேசையா, நியாயதுரந்தரர் க. சிவபரநாதன் முதலானோர். பின் இவர் தமது நண்பராகிய நல்லூர் திரு. த. கைலாசபிள்ளையவர்கள் விருப்பப்படி வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினர். அக்காலம் அங்கே ஒரு காவிய பாடசாலை அமைத்து, அதில் பண்டித வகுப்புகள் வைத்து நடாத்தினர். அதில் பல மாணவர்கள் கற்றனர். ஆனால் ஒருவருட காலத்துள் எல்லாரும் விலகிக் கொண்டார்கள். ஒருவர் மாத்திரம் நிலையாயிருந்து படித்து மதுரைப் பண்டித பரீட்சையிற் சித்தியடைந்தார். அவர் இப்போது தமிழ்ப் பேராசிரியராகக் கடமைபுரியும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களாவர்.

புலவர் அவர்கள் பல பெருமக்களாலும் மதிக்கப்பெற்றவர்கள். கண்டனத்தில் மிக வல்லவர். பிழை பிடிப்பதில் சமர்த்தர். இதனால் எவரும் அவருக்கு அஞ்சுவர். இத்தகைய பெரியார் முறையாகத் தீர்த்த தல யாத்திரைகள் செய்வர். இந்தியா சென்றகாலை பாண்டித்துரைத் தேவர், இராகவ ஐயங்கார் போன்ற பெரியார்கள் இவரை வரவேற்றனர். பின் திருவாவடுதுறை யாதீனம் சென்றார். அப்போது குருமூர்த்தி திருவிடைமருதூரில இருப்பதையறிந்து அங்கு சென்றார். சுவாமிகளால் உபசரிக்கப்பட்டு, அங்கே தங்கினர். அப்போது குருமூர்த்தியாகிய அம்பலவாண தேசிக சுவாமிகள் புலவருக்கு அருளைக்கம் செய்து மகிழ்ந்து பட்டுப் பீதாம்பரங்களைப் பரிசாக வழங்கினர். அப்பொழுது புலவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாசாரிய சுவாமிகள் மேல சில கவிகள் பாடியுள்ளார். இதிலிருந்து புலவரவர்கள் குருபக்தியிற் சிறந்தவர்களென்பது வெள்ளிடைமலை. பின் சுவாமிகளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சூரியனார் கோயிலாதீனம் சென்று, ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிகசுவாமிகளோடும் சம்பாஷித்துக்கொண்டு சிதம்பரம் சென்று நாவலர் பாடசாலையைத் தரிசித்தனர். பின் திருப்பரங்குன்றம் சென்று சுவாமி தரிசனம் செய்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

இத்தகைய பெரியார் அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பாடுபட்டுழைத்தனர். அத்தகைய அளவில் புகழ்புலவர் பெருமான் பலருக்கும் பாடம் சொல்லிக்கொடுத்து அத்துவித சித்தாந்தியாக வாழ்ந்து இறைவன் திருவடி நிழல் எய்தினர்.

இப்பெரியாரது நினைவு நாளைச் சைவமக்கள் எல்லாரும் மகேஸ்வரபூசை செய்து கொண்டாடி மகிழ்தல் தமிழ்த்தாய்க்கு அன்பு செய்து [illegible] நோக்கும் என்பதிற் சந்தேகமில்லை,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் செயபாறிசன் றோட்டு
பேதுருப்பிள்ளை ஞானப்பிரகாசம்
வழக்காளி.

இல, M B 558

எதிராக

யாழ்ப்பாணம் கதட்றல் ஸ்றீற்
(Cathedral Street)

1. V. A மோசேஸ், உம்
2. பெண் புளோறன்ஸ், உம்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 558ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956ஆம் சித்திரை மீ 10 உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோயிற்பற்று கரையூர் இறை "கிளாந்தறை" 3 3/8 பரப்பு (கிலைப்பரப்பு)ம் இணறும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு ஞேமான் கத்தோலிக்க மிஷனின் ஆதனம். வடக்கு பயஸ் யோண்பிள்ளைக்கும் மறு பேருக்குமுடைய வாதனங்கள், மேற்கு ஒழுங்கையும் யோசேப்பு பெண் மற்றில்டாவினுதனமும் சைமன் கைம்பெண் விக்டோரியாவினுதனமும் தெற்கு J. B. S சின்னத்தம்பியின் பெண்சாதிக்கும் J. மனவல் பெண்சாதிக்குமுடைய வாதனங்கள். இதில் சொரியலாய் ¼ பங்கும் வீடும். அதைச் சேர்ந்தவைகளும் ஆனால் தெற்குப்பக்கத்து அறை பிற நீங்கலாக.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்.

51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்,
1956ம் ஆ மாசி மீ 18 ந் உ.

M. 231, 24-2- (ரூ. 200)

## பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

சனிக்கிழமை 18-2-56 நள்ளிரவு தலைமைத் தேசாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டாராம். 19-4-56ல் புதிய பாராளுமன்றம் கூடுமாம்.

## மட்டக்களப்பில் போட்டி ஒழிக்க முயற்சி

மட்டக்களப்புக்குப் பிரதிநிதி ஒருவரைப் போட்டியின்றித் தெரிந்தனுப்புதற்கு தமிழ் இளைஞர் முன்னணித் தலைவர் நியாயவாதி திரு. எம். கனகசுந்தரம் அவர்களும் முன்னணி நிருவாகசபை அங்கத்தவர்களும் முயல்கின்றார்களாம்.

## திருத்தொண்டர் பிரசாத்

இந்திய குடியரசுத் தலைவர் கலாநிதி இராசேந்திர பிரசாத் அவர்களுக்கு திருத்தொண்டர் (Saint) என்னும் பட்டத்தை இந்திய சாதுக்கள் சேவகசங்கத்தார் கொடுத்திருக்கின்றனராம்.

இச் சாதுசங்கத்தில் வைத்திய கலாநிதிகள், ஆசிரியர்கள், நீதிபதிகள் முதலிய பதவிகள் முன்பு வகித்து இளைப்பாறிய பலர் சாதுக்களாகி அங்கத்தினராயுள்ளனராம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில, யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னையபிள்ளை அவர்களால் 24-2-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளிப்படுத்தப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org